**செ. கு. எண்: 037** **நாள் :02.02.2016**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்</u>

<u>அறிக்கை – 2.2.2016</u>

6.10.2015 அன்று தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், நாராயணதேவன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜாங்கம்;

18.10.2015 அன்று திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், மூலனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலசுப்பிரமணி;

1.11.2015 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், மேட்டுப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அச்சுதானந்தம்;

-- ஆகிய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தொழிலாளர்கள் பணியிலிருக்கும் போது மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

26.8.2015 அன்று புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பையா என்பவரின் மகன் ராமு;

30.8.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடசேரி பகுதியைச் சேர்ந்த திரு. ஈசாக் என்பவரின் மகன் சுபாஷ்;

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், கொத்தட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்புசாமி என்பவரின் மகன் கணேசன்;

5.9.2015 அன்று கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், மு.பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கருணாநிதி என்பவரின் மனைவி செல்வி;

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், கக்கனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சாரங்கபாணி என்பவரின் மகன் முருகதாஸ்;

12.9.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், ஆரம்பாக்கம் மஜ்ரா, பாட்டைக்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மகன் சங்கர்;

24.9.2015 அன்று வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாபு மற்றும் அவரது மனைவி பாரதி;

–– ஆகியோர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **11** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

27.9.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கடம்பூர் கிராமத்தைச் சேர்ந்த பெருமாள் மற்றும் பாபு;

28.9.2015 அன்று திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், புதுப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த திரு. வெங்கடாசலம் என்பவரின் மகன் சிவலிங்கம்;

--- ஆகியோர் பல்வேறு விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **3** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**